| யா/க/4128 | திரு. இளையதம்பி கந்தையா ஆறுமுகம் |
| யா/க/4151 | திரு. நாகலிங்கம் பத்மநாதன் |
| யா/க/4183 | திரு. வல்லி பூபாலு |
| யா/க/4240 | திரு. தம்பு வடிவேலு |
| யா/க/4271 | திரு. சங்கரன் கந்தன் |
| யா/க/4323 | திரு. வல்லிபுரம் விசுவலிங்கம் |
| யா/க/4359 | திரு. லோறன்ஸ் சிவகுமார் |
| யா/க/4391 | திரு. நாகநாதி கனகராசா |
| யா/க/4494 | திரு. கனகு தங்கேஸ்வரன் |
| யா/க/4503 | திருமதி. பொன்னம்மா பொன்னம்பலம் |
| யா/க/4506 | திரு. தம்பையா பரராசசிங்கம் |
| யா/க/4515 | திரு. இராசன் இராசரத்தினம் |
| யா/க/4549 | திருமதி. புவனேஸ்வரி கெங்காதரன் |
| யா/க/4595 | திரு. ஆறுமுகம் தேவராசா |
| யா/க/4684 | திரு. தியாகராசா கோபாலசண்முகம் |
| யா/க/4699 | திருமதி. இந்திராணி குமாரவேல் |
| யா/க/4746 | திரு. முத்தன் சரவணை |
| யா/க/4785 | திருமதி. வதனபாஸ்கரி குமாரகுலசிங்கம் |
| யா/க/4877 | திரு. சின்னத்துரை செந்திநாதன் |
| யா/க/4916 | திருமதி. இலட்சுமி சிவசிதம்பரம் |
| யா/க/5117 | திருமதி. தவராசேஸ்வரி சிவஞானசுந்தரம் |
| யா/க/5144 | திருமதி. பொன்னம்மா திருநாவுக்கரசு |
| யா/க/5186 | திரு. அண்ணாச்சாமிஐயர் இரவீந்திரசர்மா |
| யா/க/5254 | திரு. நடராஜா இராமகிருஸ்ணன் |
| யா/க/5275 | திருமதி. கமலாதேவி கணேசலிங்கம் |

## வேலணை உதவி அரச அதிபர் பிரிவு

| தொடர்பு எண் | முழுப்பெயர் |
|---|---|
| யா/வே/9 | திரு. வைத்திலிங்கம் சிவராஜா |
| யா/வே/164 | திரு. பொன்னுத்துரை தியாகமணி |
| யா/வே/207 | திரு. ஐயாத்துரை பார்த்திபன் |
| யா/வே/225 | திரு. கந்தையா இரட்ணசிங்கம் |
| யா/வே/289 | திருமதி. தனபாலதேவி பாலச்சந்திரன் |
| யா/வே/292 | செல்வன். மனோகரன் தரணீகரன் |
| யா/வே/375 | செல்வி. சாவித்திரிதேவி வினாசித்தம்பி |
| யா/வே/449 | திரு. சோமநாதி சின்னையா |
| யா/வே/476 | திருமதி. சற்குணராணி பாலகிருஸ்ணன் |
| யா/வே/544 | திருமதி. இந்திராதேவி சுந்தரலிங்கம் |
| யா/வே/578 | திரு. அம்பலவாணர் வைரமுத்து |
| யா/வே/727 | திரு. கந்தையாபிள்ளை கனகசுந்தரம் |
| யா/வே/822 | திருமதி. திலகவதி பரநிருபசிங்கம் |
| யா/வே/848 | திருமதி. பரிமளாதேவி குகானந்தவேலு |
| யா/வே/864 | திரு. முத்துக்குமாரு ஆறுமுகம் |
| யா/வே/904 | திரு. மயில்வாகனம் துரைராசா |
| யா/வே/986 | திருமதி. மகேஸ்வரி மயில்வாகனம் |
| யா/வே/1030 | திரு. மதியாபரணம் லோகநாதன் |
| யா/வே/1046 | செல்வி. ஜெயந்தி கனகரத்தினம் |
| யா/வே/1091 | திருமதி. நாகேஸ்வரி சங்கரலிங்கம் |
| யா/வே/1104 | திரு. முத்தையா விஜயரட்ணம் |
| யா/வே/1119 | திரு. தியாகராசா பாலச்சந்திரன் |
| யா/வே/1122 | திரு. பசுபதிப்பிள்ளை நடராசா |
| யா/வே/1147 | திரு. விசுவலிங்கம் செல்வராசன் |
| யா/வே/1185 | திருமதி. மகாலட்சுமி கோபாலபிள்ளை |
| யா/வே/1212 | திரு. இரத்தினசபாபதி சுந்தரலிங்கம் |
| யா/வே/1218 | திருமதி. சரஸ்வதி சண்முகலிங்கம் |
| யா/வே/1225 | திருமதி. சறோஜினிதேவி திருச்செல்வம் |
| யா/வே/1238 | திருமதி. வீரலட்சுமி கஜேந்திரன் |
| யா/வே/1247 | திரு. தம்பையா பொன்னுச்சாமி |
| யா/வே/1280 | திரு. சின்னையா கனகராசா |
| யா/வே/1329 | திருமதி. ஜெயந்தினி சிவபாதசுந்தரம் |
| யா/வே/1395 | திருமதி. உத்தரியம் நாகேந்திரம் |
| யா/வே/1426 | திரு. இராமநாதி குமாரசாமி (செல்வரட்ணம்) |
| யா/வே/1461 | திரு. கணபதி மார்க்கண்டு |
| யா/வே/1507 | திருமதி. தங்கம்மா அப்பையா |
| யா/வே/1564 | திரு. முத்தையா பத்மநாதன் |
| யா/வே/1601 | செல்வன். நாகேசு பகீரதன் |
| யா/வே/1634 | திருமதி. ஞானேஸ்வரி கந்தசாமி |
| யா/வே/1714 | திருமதி. மதலேனம்மா அந்தோனிப்பிள்ளை |
| யா/வே/1727 | செல்வி. மேரிஸ்ரெலா விக்ரர் |
| யா/வே/1889 | திருமதி. சின்னம்மா நாகலிங்கம் |
| யா/வே/1932 | திரு. சுப்பையா துரைச்சாமி |
| யா/வே/1988 | திரு. முத்தையா தேவானந்தன் |
| யா/வே/2158 | திருமதி. மோனிக்கம்மா நீக்கிலாம்பிள்ளை |
| யா/வே/2282 | திரு. லிங்கப்பிள்ளை பரமநாதன் |
| யா/வே/2347 | திரு. சின்னத்துரை சுப்பிரமணியம் |
| யா/வே/2379 | திரு. ஆறுமுகம் பொன்னுச்சாமி |
| யா/வே/2434 | திருமதி. தவஈஸ்வரிதேவி நடராசா |
| யா/வே/2438 | திரு. சபாரெத்தினம் ஜெயரெத்தினம் |
| யா/வே/2457 | திருமதி. லோறா பெயாற்றிஸ் செல்வநாயகம் |
| யா/வே/2458 | திருமதி. யசிந்தா ஜேம்ஸ் இரத்தினசிங்கம் |
| யா/வே/2488 | திரு. மைக்கெல் பிரான்சிஸ் |
| யா/வே/2515 | திருமதி. இராமாசிப்பிள்ளை நமசிவாயம் |
| யா/வே/2522 | திரு. ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை |
| யா/வே/2543 | திருமதி. ஜெஸ்மிமெற்றில்டாவில்பிறட் |
| யா/வே/2597 | திரு. பர்ணாந்து அந்தோனிசாமி |
| யா/வே/2604 | திரு. மாணிக்கம் தங்கேஸ்வரன் |
| யா/வே/2613 | திருமதி. ஞானம்மா சிவபாலன் |
| யா/வே/2620 | திரு. வின்சென்றடிபோல்டலிமாசிசபேல் |
| யா/வே/2665 | திரு. சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை |
| யா/வே/2702 | திருமதி. தேவராணி சத்தியசீலன் |
| யா/வே/2706 | திருமதி. வாகீஸ்வரி சர்வேஸ்வரன் |
| யா/வே/2708 | திரு. சங்கரப்பிள்ளை சதாசிவம் |
| யா/வே/2771 | திரு. பிரான்சிஸ்சேவியர் அன்ரன்இளங்கோ |
| யா/வே/2781 | திரு. நாகலிங்கம் பாலசுப்பிரமணியம் |
| யா/வே/2795 | திருமதி. சத்தியபாமா செல்லத்துரை |
| யா/வே/2820 | திரு. பொன்னுத்துரை ஜெகதாசன் |
| யா/வே/2828 | திருமதி. பரமேஸ்வரி சுப்பிரமணியம் |
| யா/வே/2838 | திருமதி. சறோசா ஜெயபாலசிங்கம் |
| யா/வே/2850 | திருமதி. கதிராசிப்பிள்ளை வல்லிபுரம் |
| யா/வே/2888 | திரு. நடராசா தர்மலிங்கம் |
| யா/வே/2905 | திருமதி. உதயகுமாரி ஜெயகாந்தன் |

## காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு

| தொடர்பு எண் | முழுப்பெயர் |
|---|---|
| யா/கா/37 | திரு. வேலுப்பிள்ளை சண்முகராசா |
| யா/கா/150 | திரு. தாமோதரம்பிள்ளை சிவபாதசுந்தரம் |
| யா/கா/193 | திரு. வேலுப்பிள்ளை தர்மரத்தினம் |
| யா/கா/194 | திருமதி. தர்மதேவி யோகநாதன் |
| யா/கா/282 | திருமதி. தங்கம்மா கணபதிப்பிள்ளை |
| யா/கா/360 | திரு. கதிரவேலு கந்தசாமி |
| யா/கா/362 | திரு. கந்தையா சுப்பிரமணியம் |
| யா/கா/442 | திருமதி. தவமணி மாணிக்கவாசகர் |
| யா/கா/471 | திருமதி. தனலட்சுமி சிதம்பரநாதன் |
| யா/கா/494 | திரு. குமாரவேலுப்பிள்ளை குலசிங்கம் |
| யா/கா/547 | திரு. காசிநாதன் பாலசுப்பிரமணியம் |
| யா/கா/555 | திரு. சுந்தரமூர்த்தி அருணகிரிநாதன் |
| யா/கா/559 | திரு. பொன்னம்பலம் ஆறுமுகம் |
| யா/கா/650 | திருமதி. மகேஸ்வரி ஞானசம்பந்தசர்மா |
| யா/கா/716 | திரு. கந்தையா குகபரன் |
| யா/கா/765 | திருமதி. அமிர்தவல்லி தேவராசா |
| யா/கா/768 | திரு. கதிர்காமு இரத்தினம் |
| யா/கா/774 | திருமதி. பாக்கியம் ஐயம்பிள்ளை |
| யா/கா/794 | திருமதி. பரமேஸ்வரி சண்முகநாதன் |

# 572 தீவுகளைக் கொண்ட அந்தமான் நிக்கோபார் தீவுகள்

வங்கக் கடலின் நடுவே அமைந்துள்ள அழகிய தீவுக் கூட்டங்களான அந்தமான், நிக்கோபார் தீவுகள் என மொத்தம் 572 தீவுகள் உள்ளன. இங்குள்ள மக்கள் தொகை நான்கு இலட்சம் தான்.

அதிலும் 82 ஆயிரத்து 138 பேர் வங்க மொழியும், 67 ஆயிரத்து 958 பேர் பல மொழியையும் பேசுகின்றார்கள். எனினும் இங்கு ஹிந்திதான் ஆட்சி மொழியாக உள்ளது.

புதுவை போன்ற யூனியன் பிரதேசங்களில் உள்ளது போல் இங்கு சட்டமன்றம் கிடையாது. 18 உறுப்பினர்கள் அடங்கிய நகராட்சி மன்றமே உள்ளது.

மற்ற மாநிலங்களிலுள்ளது போன்று இங்கு அனைத்து அரசியல் கட்சிப் பிரதிநிதிகளும் உள்ளனர்.

பெரும்பாலும் தமிழ் பேசுவோர் மட்டுமே அதிகமாக எண்ணிக்கையில் கவுன்சிலர்களாக உள்ளார்கள்.

தற்போதுள்ள முறைப்படி துணைநிலை ஆளுநர் என்.என்.ரா. தலைமையில் அனைத்து நிர்வாகப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், சட்டமன்றம் இருந்தால் மத்திய அரசு வழங்கும் நிதி, சலுகைகளையும் கொண்டு பல வசதிகள் மக்களுக்கு வழங்க முடியும் என்பது இங்குள்ள அரசியல் கட்சியினரின் நம்பிக்கையாகும்.

ஆனால் இந்தியாவில் முதன்மை யூனியன் பிரதேசமாக அந்தமான் நிக்கோபார் தீவுகளில் இன்றுவரை பஞ்சாயத்து நிர்வாக முறையே தொடர்ந்து நடைமுறையில் இருக்கின்றது.

மற்றைய யூனியன் பிரதேசங்களைப் போல் அந்தமான் தீவுகளிலும் சட்ட மன்றத்தை உருவாக்கி, மக்களாட்சியை ஏற்படுத்த வேண்டுமென்பது அங்கு வாழும் மக்களின் கோரிக்கையாகவுள்ளது.

சுதந்திரப் போராட்டத்திற்கான பல அடையாளங்களைக் கொண்டுள்ள அந்தமான் நிக்கோபார் தீவுகளில் கடந்த 1947இல் இருந்து சட்டமன்றம் ஏற்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.


# புதிய தொலைபேசி



தொலைபேசி அடித்துக் கொண்டிருக்கின்றது. நாம் ஏதாவது அவசர வேலைகளில் இருக்கின்றோமென்றால், உடனே தொலைபேசியை எடுப்பது சிரமம் என்பதுடன், நாம் தொலைபேசியை எடுப்பதற்கிடையில் இணைப்பு துண்டிக்கப்பட்டும் விடக்கூடும்.

அமெரிக்காவைச் சேர்ந்த டேவிட் மில்ராடி என்பவர் இப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுள்ளார்.

தொலைபேசி மணி அடிக்கும் போது நாம் கொஞ்சம் பொறுங்கள் அல்லது இரண்டு நிமிடங்களால் எடுங்கள் எனக் கூறினால் தொலைபேசி அப்படியே திருப்பிக்கூறும். குறிப்பிட்ட தூரத்திலிருந்து நாம் கூறுவதை திருப்பிக் கூறும் இக்கருவியின் விலை 20 டொலர் மட்டுமே ஆகும். எந்தவிதமான தொலைபேசியுடனும் இக்கருவியை இணைத்துக் கொள்ளலாம்.



**ஜப்பானில் புதிதாக அறிமுகமாகியிருக்கும் வீடியோ கமரா தொழில்நுட்பத்துடன் கூடிய தொலைபேசியைக் காணலாம்.**

# தரையில் ஓடி மேலெழும்பும் பறவை

உலகிலேயே மிக நீளமான இறக்கை கொண்ட பறவை "அண்டரண்டப்பறவைதான்" **(Wandering dldatross)** வேகமாக இறக்கையடிக்கும் இப் பறவை அடிக்கடி இடம்மாறியும் கொள்ளும். இதன் இறக்கையின் நீளம் 3.45 மீற்றர் ஆகும்.

பறக்கத் தொடங்கும் போது இறக்கையடிக்கவும், உயர எழும்பவும் தனது முழு ஆற்றலையும் பயன்படுத்துகின்றது. எளிதாகப் பறக்கத் தொடங்க வேண்டும் என்பதற்காகவே பெரும்பாலும் செங்குத்தான மலைகளின் உச்சியில் கூடுகட்டி வாழ்கின்றது.

ஆனால் வேறு இனத்தைச் சேர்ந்த அண்டரண்டப் பறவைகளும் இருக்கின்றன. இவை வித்தியாசமானவை. தாழ்வான கடல் தீவுகளில் தான் கூடுகட்டி வாழ்கின்றன. இதன் பெயர் "ஆல்பட்ராஸ்" என்பதாகும்.

இந்த ஆல்பட்ராஸ் பறவை பறக்கத் தொடங்குவது அழகான காட்சி என்கிறார்கள் பறவை ஆராய்ச்சியாளர்கள்.

கூட்டுக்கு அருகில் செடி,கொடி, புல், பூண்டு எதுவுமில்லாது சுத்தமான பாதையைப்போன்று அமைத்துக் கொள்ளும். இதனை அது ஓடுபாதையாகப் பயன்படுத்துகின்றது. பறக்க விரும்பும் போது இந்தப் பாதையின் ஓரத்தில் வந்து நிற்கும்.

பின்னர் தனது பெரிய இருகால் தரையை அடித்துக்கொண்டே ஜெட் விமானம்போல வேகமாக ஓடும். இந்த உந்து விசையைக்கொண்டு ஆல்பட்ராஸ் பறவை காற்றில் ஏறிப்பறக்கத் தொடங்குகின்றது.

காற்றில் ஏறிவிட்டால் போதும், பெரிய காற்றாடியைப் போல் மேலும் கீழும் ஏறி இறங்கி நளினமாகப் பறக்கத் தொடங்கிவிடும்.

கடல் பரப்பில் இறங்கும்போது இந்த இரு பறவையினங்களும் அழகாக இறங்குகின்றது.

அதாவது வானூர்தி போலவே கொஞ்சம் கொஞ்சமாக உயரத்தைக் குறைத்துக்கொண்டுவானில் மிதந்து வருகின்றது.

தென்துருவப் பகுதியின் உறைந்த கடல்களில் வாழும் இந்த அண்டரண்டப் பறவை கடலின் குறுக்கே வீசும் காற்றுடன் அடிக்கடி பயணம் செய்கின்றது.

நெடுநேரம் உலகத்தைச் சுற்றிவானில் பறக்க இந்தப் பறவையால் முடியும் என்றும் அவ்வப்போது இரைக்கு மட்டுமே கீழேவரும், மீண்டும் வானில் ஏறிவிடும் என்று அதிசயிக்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

ஆண்டில் பெரும் பகுதியை இந்தப் பறவை வானத்திலேயே கழிக்கின்றது. இடையிடையே தீவுப் பகுதிகளில் இறங்கி ஓய்வும் எடுத்துக்கொள்ளும்.

அலகை மூடிக்கொண்டு இறக்கை விரித்து அண்டரண்டப் பறவை நடனம் கூட ஆடும் என்கிறார்கள் பறவை ஆராய்ச்சியாளர்கள்.

# பாப்பிரஸ் நாணல் புல்லை ஒட்டவைத்து தயாரிக்கப்பட்ட காகிதம்

நாம் எழுதும் காகிதம் ஆரம்பமானது எகிப்தில்தான். எகிப்தியர்கள் இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன்பு, நைல் நதியின் கழிமுகத்தில் வளர்ந்த "பாப்பிரஸ் நாணலில்" முதன்முதல் காகிதம் தயாரித்தார்கள்.

எவ்வாறெனில், பாப்பிரஸ் நாணல் குழல்களை அருகருகே வைத்து கொதிக்கும் நீரில் மாவை ஊற வைத்து அந்தப் பசையில் ஒட்ட வைத்தார்கள்.

வரட்சியான காலநிலை பாப்பிரஸ் ஆவணங்களை அழியாமல் பாதுகாத்தது.

இந்த ஆவணங்களை இன்றும் எகிப்திய அருங்காட்சியத்தில் காண முடியும்.

எகிப்திற்கு வெளியே பாப்பிரஸ் நாணல் வளரவில்லையென்பதால் பல நாடுகள் காகித்தை எகிப்திலிருந்து இறக்குமதி செய்து பயன்படுத்தின.

இருப்பினும் காகிதம் ஐரோப்பாவிற்குச் செல்லவில்லை என்பதால்,

ஐரோப்பியர்கள் மிருகங்களின் தோலின் மேல் எழுதினார்கள். இத்தோல் ஆவணங்களில் அனுகூலமும் இருந்தது. பாப்பிரஸ் நாணல் காகிதத்தை சுருட்டித்தான் வைக்க வேண்டியிருந்தது. இதனால் வெடிப்பு ஏற்பட்டது.

ஆனால் தோல் ஆவணத்தை மடித்து வைத்து பாவிக்கக் கூடியதாக இருந்தது. இது படிப்பதற்கு வசதியாக இருந்ததுடன், தோலின் இருபுறமும் எழுதக் கூடியதாகவும் இருந்தது. அத்துடன் தோலில் எழுதியவற்றை தேவையில்லை என்றவுடன் அழித்து வேறுவிடயங்கள் எழுதக் கூடிய தன்மையுடன் காணப்பட்டது.

இன்று பயன்படும் காகிதம் சீனாவில்தான் கி.பி. 105 இல் உருவானது.அதை உருவாக்கியவர் "ட்ஸாய் லுன்" எனும் சீன அதிகாரி.

காகிதம் தயாரிக்க இவர் மீன்பிடி வலை முதல் கந்தல் துணிவரை பயன்படுத்தினார். சுமார் 1000 ஆண்டு காலம் காகிதம் தயாரிக்கும் முறையை சீனர்கள் ரகசியமாகவே பாதுகாத்தார்கள்.

இதன் பின்னர் "மூர் இனத்தவர்கள்" இந்த ரகசியத்தைத் தெரிந்த கொண்டு ஸ்பெயினுக்கும், சிலிக்கும் காகிதத்தை அறிமுகப்படுத்தினார்கள்.

இதன் பின்னர் காகிதம் ஐரோப்பா முழுவதும் பரவியது. 13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காகித ஆலைகள் உருவாகிவிட்டன.

"யோஹான் குடன்பர்க்" அச்சு இயந்திரத்தைக் கண்டு பிடித்ததுடன் காகிதத்தின் தேவை பல மடங்கு பெருகியது.

இதனையடுத்து 50ஆண்டுகளுக்குள் ஆயிரக்கணக்கில் புத்தகங்கள் அச்சடிக்கும் பழக்கம் ஏற்பட்டது. காகிதத்தின் தேவையும் கூடியது.

காலப் போக்கில் "ட்சாய் லுன்" காகிதம் தயாரிக்கப் பயன்படுத்திய பொருட்களுக்குப் பதிலாக எளிதில் கிடைக்கக் கூடிய, விலை குறைவான மரக்கூழ், வைக்கோல் கொண்டு காகிதம் தயாரிக்கப்பட்டது.

இன்றையளவில் உலகில் ஆண்டொன்றிற்கு 140 கோடி டன் காகிதம் தயாராகின்றது என்று அறிக்கைகள் கூறுகின்றன.

# தெரிந்துகொள்ள...

☐ அவுஸ்திரேலியாவில் எரிமலை ஒன்றுகூடக் கிடையாது எனக் கூறப்படுகின்றது.

☐ ஈராக்கில் உலகின் மிகப் பழமையான உர்**(UR)** நகரம் இருக்கின்றது. தெற்கு ஈராக் பகுதியில் உள்ள இந்த நகரிலுள்ள சுவர்கள் கி.மு.2100 இல் கட்டப்பட்டவை என்று கூறப்படுகின்றது.

☐ விட்டமின்**(E)**ஈ அதிகமுள்ள அரிசி மஞ்சள் நிறத்தில் இருக்கும். இதை பிலிப்பைன்ஸ் மணிலாவில் உள்ள சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிலையம் கண்டுபிடித்தது. இதேபோல் விட்டமின் **(A)** ஏ உள்ள அரிசியை இந்தியாவும் கண்டுபிடித்துவிட்டது. ஆனால் இந்த இரண்டு அரிசிகளும் மக்களுக்கு வந்து சேரவில்லை. இப்போது கிடைக்குமானால் மருத்துவச் செலவுகள் பத்தாண்டுகளின் பின்னர் மிகவும் குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்தளவிற்கு ஆரோக்கியம் பாதுகாக்கப்படும். அதனால் வெகுவிரைவில் இந்த இரண்டு அரிசிகளும் சந்தைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

☐ ஜேர்மனி ஒரு புதிய ரயிலை அறிமுகப்படுத்தியுள்ளது. **I.C.E** என்றழைக்கப்படும் இந்த ரயிலை ஏஜ்குருப் எனும் கம்பனிகள் இணைந்து தயாரித்துள்ளன. 14 பெட்டிகளைக் கொண்ட இதன் நீளம் 400 மீற்றர்களாகும். நீச்சல் குளம் குளிக்கும் அறைகள், உணவுஅறை, தொலைபேசி வசதி, ரெலக்ஸ், குளிரூட்டல் வசதிகள் என அனைத்தும் கொண்டது. இதன் வேகம் விமானத்தின் வேகத்தில் பாதியாகும். குறிப்பிட்ட தரிப்பிடத்தில் நிற்க வேண்டுமெனில் ஐந்து கிலோ மீற்றர் தூரம் இருக்கும் போதே பிரேக் போட வேண்டும்.

☐ ஜப்பான், அவுஸ்திரேலியா, ஜேர்மனி, ரஷ்யா, செக்கோஸ்லோவோக்கியா, மற்றும் அமெரிக்க ஆசிய நாடுகளில் பிறந்த குழந்தைகளுக்கு நீச்சல் கற்றுத் தரும் பயிற்சி நிலையங்கள் பெரும் பிரபல்யமாகவுள்ளன. எனினும் முதன்முதலில் இந்த ஆராய்ச்சியில் பரிசோதனை முயற்சிகள் மூலம் பெரும் வெற்றியடைந்த நாடு ரஷ்யாதான் என்றும் கூறப்படுகின்றது.

# 7000ஆண்டுகள் பழமை வாய்ந்த ஆய்வுகூடம்

ஜேர்மன் நாட்டில் 7000 ஆண்டுகள் பழமை வாய்ந்த சூரிய ஆய்வு கூடம் ஒன்றை அந்நாட்டின் தொல்பொருள் ஆய்வுத்துறையினர் கண்டுபிடித்துள்ளனர்.

ஜேர்மன் நாட்டிலுள்ள கோஷா எனுமிடத்தில் சூரியனை ஆய்வு செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஆயவுகூடம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்து பிறப்பதற்கு 5000 ஆண்டுகளுக்கு முன்பு இந்த ஆய்வு கூடத்தில் சூரியனைப் பற்றிய ஆய்வுகள் நடத்தியதற்கான சான்றுகளும். ஆய்வு கருவிகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

ஜேர்மன் நாட்டின் ஹாலே பல்கலைகழகத்தைச் சேர்ந்த தொல்பொருள் ஆய்வுத் துறையினரும் மற்றும் மாட்டீன் லூதர் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 30 மாணவர்களும் சேர்ந்து செய்த ஆய்வின் போது,

இந்த சூரிய ஆய்வு கூடம் கண்டறியப்பட்டுள்ளது. சூரியன் பற்றியும், பல்வேறு கோள்கள் பற்றியும் 7000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆய்வு மேற்கொண்டதற்கான சான்றுகள் கிடைத்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

# விண்மீன்கள் எப்படிப் பிறக்கின்றன

விண்மீன்கள் எப்படி பிறக்கின்றன?

விண்வெளி வெற்றிடமல்ல. விண்மீன்கள், கோள்கள் போன்ற கோளங்களுக்கிடையில் மீனிடைப் பொருள் என்பது இருக்கின்றது.

இது வாயுக்களாலும் இருண்ட திடத்தூசாலும் ஆனதாகும். இதில் பெரும்பகுதி நீர்வாயுவாகும். இந்த வாயுக்களும், தூசுக்களும் கலந்து இறுகி இருண்ட மேகமாக ஆகின்றன.

தமது ஈர்ப்பு விசையின் காரணமாகவே இந்த மேகங்கள் இறுகிச் சுருங்குகின்றன. அப்போது அவற்றில் வெப்பமும் எழுகின்றது.

வெப்பமும், அழுத்தமும் அதிகமாகிக் குறிப்பிட்ட அளவுக்கு வந்ததும் அம்மேகம் வெடித்து ஒளிவிடும் நட்சத்திரமாக ஆகின்றது.

புதிதாகப் பிறந்த விண்மீன் அதிகமாக ஒளிவீசுகின்றது. அதனால் சுற்றியுள்ள மீனிடைவாயு ஒளிர்கின்றது. விண்மீனைச் சூழ்ந்திருக்கும் ஒளிரும் வாயுக்களால் ஆன இந்தத் தொகுதியை விண்மீனின் ஒளி முகில **(nebula)** என்று அழைக்கப்படும்.

இந்த விண்மீன்கள் அவ்வப்போது புதிது புதிதாகப் பிறக்கின்றன. அதே போல் விண்மீன்கள் இறந்தும் போகின்றன என்று விண்ணாராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

# கோவை மருத்துவர் சாதனை

கோவை மருத்துவர் வெப்பக் கதிர்வீச்சு மூலம் கல்லீரல் புற்றுநோயை முதன்முதலாக குணப்படுத்திச் சாதனை படைத்துள்ளார். செங்கோடன் என்பவருக்கு வயிற்றில் ஏற்பட்ட கட்டியை அகற்ற பல்வேறு மருத்துவர்களை நாடினார். இந்தக் கட்டி அகற்றப்படுமானால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என கட்டியை அகற்ற மருத்துவர்கள் மறுத்துவிட்டனர். ஆனால் கோவை மருத்துவமனைப் பரிசோதனையில் அந்தக் கட்டி கல்லீரல் புற்றுநோய் எனத் தெரியவந்தது. இதையடுத்து வெப்பக் கதிர்வீச்சு மூலம் அறுவைச் சிகிச்சை இல்லாமலேயே இந்தக் கட்டியை மருத்துவர் அகற்றிச் சாதனை புரிந்துள்ளார்.

# கேள்வி அறிவித்தல்

# புழுங்கல்(சிவப்பு நாடு)அரிசி கொள்வனவு

**முல்லைத்தீவு மாவட்டச் செயலக கேள்விச்சபைத் தலைவரால் புழுங்கல் (சிவப்புநாடு) அரிசி மாதம் ஒன்றிற்கு 400 மெ.தொன் இம்மாவட்டத்தில் உலருணவு விநியோகத்திற்காக கொள்வனவு செய்து பின்வரும் ப.நோ.கூ. சங்கங்களுக்கு விநியோகம் செய்வதற்காக பொறியிடப்பட்ட விலைக் கூறு கோரப்படுகின்றது.**

| வழங்கப்பட வேண்டிய ப. நோ.கூ.சங்கம் | வழங்கப்பட வேண்டிய அரிசியின் அளவு (மெ.தொன்) | | |
|---|---|---|---|
| | ஒக்ரோபர் | நொவம்பர் | டிசம்பர் |
| 01. கரைதுறைப்பற்று | 108 | 108 | 108 |
| 02. புதுக்குடியிருப்பு | 110 | 110 | 110 |
| 03. விசுவமடு | 22 | 22 | 22 |
| 04. முத்துஐயன்கட்டு | 22 | 22 | 22 |
| 05. வவுனியா வடக்கு | 38 | 38 | 38 |
| 06. பனங்காமம் பற்று | 50 | 50 | 50 |
| 07. துணுக்காய் | 50 | 50 | 50 |
| | 400 | 400 | 400 |

## 01. தன்மை

மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/- இம்மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு அலுவலகத்தில் 2003-06-12 ஆம் திகதிக்கு முன் செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். பதிவு செய்யப்பட்ட ப.நோ. கூ. சங்கங்களுக்கும்,சமாசங்களுக்கும் வைப்புப் பணத்திலிருந்து விதிவிலக்களிக்கப்படும். கேள்வியாளர்கள் 2003-09-01 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன் கேள்விப்பத்திரங்கள், கேள்விச்சபைத் தலைவர், மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு என முகவரியிடப்பட்டு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ சேர்ப்பிக்கப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்கத்தில் "புழுங்கல் சிவப்பு நாடு அரிசிக் கொள்வனவு" எனக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அன்றைய தினமே பி.ப.3.00 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் கேள்வி கோருநரோ அல்லது அவர்களது பிரதிநிதிகளோ கலந்து கொள்ளலாம்.

02. ஒவ்வொரு விலைக்குறிப்பீட்டு கேட்பாளரும் ஒரு விலைக் குறிப்பீட்டையே அனுப்ப முடியும். மேலதிக விலைக் கூறு அனுப்பினால் ஒவ்வொரு மாற்று விலைக்குறிப்பீடும் தனியான விலைக் குறிப்பீடு கட்டுப்பாட்டுடன் அனுப்பப்பட வேண்டும்.

## 03. வரையறைகள்

1. உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

2. அரிசி நடப்பு வருட வேளாண்மையிலிருந்து எடுக்கப்பட்டதாகவும், குறையாத வர்க்கத்தைச் சேர்ந்ததாகவும் இருத்தல் வேண்டும்.

3. நன்கு தீட்டப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

4. இலங்கை தரத்தின் பிரகாரம் உடைவு 12% இற்கு கூடாமல் இருத்தல் வேண்டும். (தானியங்கள் முழு அளவில் 3/4 இலும் குறைவானவை உடைந்தவையாக எண்ணப்படும்)

5. ஈரலிப்பு 14% இற்கு மேற்படலாகாது.

6. சேதமடைந்ததும், நிறம் மாறியதுமான தானியங்களின் கூடுதல் அளவு 2%.

7. கலப்பு 2% இற்கு மேற்படலாகாது.

8. பிறபொருட்கள் 0.5% இற்கு மேற்படலாகாது.

9. வெள்ளை அரிசி 5% இற்கு மேற்படலாகாது.

10. ஒரு கிலோ கிராம் அரிசியில் இருக்கும் நெல் 10 இற்கும் மேற்படலாகாது.

## 04. விலைக் குறிப்பீடு ஒப்பந்தக் கட்டுப்பாடு பேணல்

கேள்வி அறிவித்தலில் குறிப்பிடும் அளவிற்கு ஒரு மெற்றிக் தொன்னுக்கு ரூபா 500/- க்கு குறையாமல் விலைக் குறிப்பீடு ஒப்பந்தக் கட்டுப்பாட்டைப் பேணும் வகையில் பின்தொடர வேண்டும். (இவை அரச நிறுவனங்களுக்கும் பொருந்தும். விலைக் குறிப்பீடு ஒப்பந்தக் கட்டுப்பாடு இலங்கையில் இயங்கும் ஏதாவது வர்த்தக வங்கியால் வழங்கப்பெறும் உத்தரவாதமாக இருத்தல் வேண்டும். இம்மாவட்டத்திலுள்ள ப. நோ.கூ. சங்கங்களுக்கு விதிவிலக்களிக்கப்படும்.

## 05. செயல், நிறைவேற்ற ஒப்பந்தக் கட்டுப்பாடு

தெரிவு செய்யப்பெறும் ஒப்பந்தக்காரர்கள் இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கியில் வழங்கப்பெறும் வங்கி உத்தரவாதம் கொண்டதாக இருக்கவேண்டும். இந்த உத்தரவாத வழங்குநருக்கு கட்டளை இடம்பெறும் அளவில், பெறுமதியில் 10% இற்கும் குறையாமல் இருக்க வேண்டும். இந்த ஒப்பந்தக் கட்டுப்பாடு பணம் வழங்கல் முடிவடைந்ததும் விடுக்கப்படும்.

## 06. மாதிரிக் கூறுகள்

கீழ்க்கண்ட மாதிரிக் கூறுகள் கேள்விச்சபைச் செயலாளரிடம் விலைக்குறிப்பீடு மூடப்படுவதற்கு குறிக்கப்பெற்ற நாளுக்கும், நேரத்திற்கும் பிந்தாமல் கையளிக்கப்பெறவேண்டும்.

அ) 04 சிறு சிப்ப(Packets) மாதிரிக் கூறுகள் தகுதியாக துண்டில் குறிப்பிட்டு ஒவ்வொரு உரிமை வழங்குநரால் தரப்பட வேண்டும். ஒவ்வொரு சிறு சிப்பமும் 250 கிராமுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

ஆ) 04 வெற்று பொலித்தீன் / சாக்குப் பைகள் இதற்காகப் பயன்படுத்துவதுடன் துண்டில் பதிந்திட வேண்டும். மாதிரிக் கூறுகள் வழங்கப்பெறாத கூறுவிலைகள் நிராகரிக்கப்படும்.

07. கேள்விகள் பரிசீலனை செய்யும்பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்திற்கான விலை எக்காரணம் கொண்டும் சந்தை விலையிலும் பார்க்க அதிகமாக இருக்கமாட்டாது.

## 08. கடன் காலப்பகுதியும், கொடுப்பனவு நிபந்தனைகளும்

ஒப்பந்தப் புள்ளிகளை வழங்கியோர் கடன் காலப்பகுதி வழங்கப்பெறும் நாளிலிருந்து 45 நாட்கள் அனுமதிக்கவேண்டும். வழங்கலுக்கான கொடுப்பனவு தகுதிவாய்ந்த அதிகாரியால் வழங்கப்பெறும். தரம் தொடர்பாக 03 ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கிணங்க சான்றிதழின் பேரில் வழங்கப்பெறும்.

09. கேள்விச்சபைக்கு கேள்வி எதனையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை உண்டு. கேள்வியாளர் பொருள் தேவைப்படும் எந்த அளவுக்கட்டளைக்கு ஏற்ப தாம் குறித்த விலையில் வழங்க வேண்டும்.

**(இமெல்டா சுகுமார்),**
**அரசாங்க அதிபர்,**
**முல்லைத்தீவு மாவட்டம்**

(சி-7778)



**சிந்தனைக்கு**

விடுதலை உணர்வே மனித ஆன்மாவின் சாரமாக - உயிர் மூச்சாக - இயங்குகின்றது. மனித வரலாற்றை இயக்கும் மகத்தான சக்தியும் அதுவே.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 23-08-2003

## பின்னோக்கி இழுக்கும் சந்திரிகா..

இணைந்துள்ள வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பிரித்து, தனித்தனியான நிர்வாகத்தின் கீழ்கொண்டு வருவது குறித்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீவிரமாக ஆலோசித்து வருவதாக வெளியாகியுள்ள தகவலானது, அவர் இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியில் தீர்வு காண்பதை விரும்பவில்லை என்பதை மட்டுமல்ல, நீண்ட காலத்திற்கு நாட்டை நெருக்கடிக்குள் இட்டுச் செல்வதற்குத் தயாராக உள்ளதையே வெளிப்படுத்துவதாகவுள் ளது.

"கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு தொடர்பாகப் பல்வேறு தரப்புக்களும் சனாதிபதியிடம் முறைப்பாடு செய்துள்ளன. கிழக்கில் நடைபெறும் சம்பவங்கள் சமாதான முயற்சிகளுக்குத் தடையாக உள்ளன" என்பதே இம்மாகாணங்களின் பிரிப்புத் தொடர்பாக சனாதிபதி தரப்பில் கூறப்படும் காரணமாகவுள்ளது.

சனாதிபதி சந்திரிகா எப்பொழுதும் முரண்பாடாகச் சிந்திப்பவராகவே உள்ளார். தனது முதலாவது பதவிக் காலத்தில் சமாதானத்திற்கான யுத்தம் என ஒரு கொடிய யுத்தத்தை அவர் நடத்தினார். இது தமிழ் மக்களை மட்டுமல்ல, சிங்கள மக்களையும், தமிழ்ப் பிரதேசத்தை மட்டுமல்ல, சிங்களப் பிரதேசங்களையும் பாதிப்பிற்குள்ளாக்கியது.

தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டத்திற்கு எதிராக ஐ.தே. கட்சியும் சரி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் சரி நீண்டகாலத்திற்கு யுத்தத்தை நடத்தியுள்ளன. ஆனால், இதில் தீவிரமான யுத்தத்தை நடத்தியவர் சனாதிபதி சந்திரிகாவே. அத்தோடு, யுத்தத்திற்குப் புதிய விளக்கம் ஒன்றையும் அவர் கொடுத்திருந்தார். அதுவே 'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற சித்தாந்தம் ஆகும்.

சிறிலங்காவின் முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த கடந்த முறை பொ.ஐ. முன்னணி பதவிக்கு வந்த வேளையில் ஒருதடவை குறிப்பிட்டார், ஐ.தே. கட்சியின் வண்டிலில் முன்னால் கட்ட வேண்டிய மாடுகளைப் பின்னால் கட்டியிருந்தனர் என்று. ரத்வத்தவின் அன்றைய கூற்றுக்கள் ஐ. தே. கட்சி கடைப்பிடித்த யுத்தம் தொடர்பான கொள்கை பற்றியதாக இருந்தது.

ஆனால், ரத்வத்தவின் அவ் உதாரணமும், பின்னர் அவர் மாட்டை முன்னால் கட்டியதினால் ஏற்பட்ட விளைவுகளும் நாட்டிற்கும், பொ. ஐ. முன்னணி அரசாங்கத்திற்கும் எத்தகைய நன்மைகள் கொடுத்தன- சிறிலங்கா இராணுவம் இதனால் பெற்றுக் கொண்ட அனுகூலம் என்பனவற்றை பொ. ஐ. முன்னணி இன்று எதிர்க்கட்சி வரிசையில் இருப்பதும் நாடு எதிர்நோக்கிய நெருக்கடிகளும் வெளிப்படுத்தத்தக்கவையாகும்.

ஆனால், ரத்வத்தவின் உதாரணம், அவர்களின் ஆட்சிக்குப் பொருத்தப்பாடானதாக இல்லாதுவிடினும், சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைக்குப் பொருத்தப்பாடானதாக உள்ளது. அதாவது, இனப்பிரச்சினைக்கான தீர்வில் காணப்பட்ட முன்னேற்றங்களை மீண்டும் கேள்விக்கும், குழப்பத்திற்கும் உள்ளாக்குவது 'வண்டிலில் பின்புறத்தில் மாட்டைக்கட்டுவதற்கொப்பானதொன்றே' ஆகும்.

ஆனால், சனாதிபதி சந்திரிகாவின் இத்தகைய ஆலோசனைகள் ஒன்றும் புதியவையல்ல. அவர் சமாதானத்தின் பெயரில் யுத்தத்தை நடத்துபவர். தனது அரசியல் அபிலாசைகளுக்கு ஏற்ப தத்துவங்களைத் தோற்றுவிக்கக் கூடியவர். அவ்வாறு இல்லாதுவிடில், வடக்கு-கிழக்கு பிரிப்பைப் பற்றி ஆலோசிப்பது மட்டுமல்ல, அது சமாதான முயற்சிகளைப் பாதிப்பிற்குள்ளாக்காது என்ற அபிப்பிராயத்தையும் சனாதிபதி தரப்பு வெளிப்படுத்த முற்பட்டிருக்கமாட்டாது.

வடக்கு-கிழக்குப் பிரதேசம் இந்திய - சிறிலங்கா சமாதான உடன்பாட்டின்படி தற்காலிகமாக இணைக்கப்பட்டது என்பது சனாதிபதியினதோ அன்றி சிறிலங்கா ஆட்சியாளர்களினதோ அபிப்பிராயமாக இருக்கலாம். ஆனால், வடக்கு-கிழக்கு இரு நிர்வாக அலகாக இருந்திருப்பினும் தமிழர் தாயகம் என்ற ரீதியில் அது என்றுமே பிரிந்திருந்ததில்லை. அது என்றுமே இணைந்தே இருந்தது.

இதேவேளை, இந்திய-சிறிலங்கா சமாதான உடன்பாடு தோல்வி அடைந்த உடன்பாடாக இருப்பினும் - இவ் உடன்பாடு ஏற்படுவதற்கு அடிப்படையாக இருந்தது இம்மாகாணங்களின் இணைப்பே ஆகும். இவ் இணைப்புப் பற்றி அவ் உடன்பாட்டில் இணக்கம் ஒன்று ஏற்பட்டிருக்காதுபோனால், அத்தகையதொரு உடன்பாட்டிற்கு தமிழர் தரப்பில் இருந்து சிறிது காலத்திற்கேனும் ஆதரவைப் பெற்றுக் கொண்டிருக்க முடியாது.

இந்நிலையில், சனாதிபதி சந்திரிகாவின் இவ் ஆலோசனையானது, இனப்பிரச்சினையை சாணேற முழம் சறுக்கும் விவகாரமாக மாற்றுவதாக மட்டுமல்ல, சமாதான முயற்சிகளுக்கும் முடிவு கட்டும் நடவடிக்கைகளாகவுமே இருக்க முடியும். அது மட்டுமல்ல, இத்தகையதொரு நிகழ்வு இடம்பெறுமானால், இலங்கையில் மேலும் இரத்தம் சிந்தப்படுவதும், இலங்கைத்தீவில் இரு நாடுகள் இருப்பதையும் தவிர்க்க முடியாததாக்கிவிடும்.

# வெளிநாட்டு மீனவரின் ஊடுருவல் குறித்து அரசு நடவடிக்கை எடுக்காதிருக்கிறது

## அகில இல. மீனவர் சங்க கூட்டுக் குழு கண்டனம்

(கொழும்பு)

நளாந்தம் சுமார் 300 க்கும் மேற்பட்ட வெளிநாட்டு மீன்பிடிக் கப்பல்கள் இலங்கை கடற் பிராந்தியத்தில் மீன்பிடித்தலில் ஈடுபடுவதாக அகில இலங்கை மீனவ சங்க கூட்டுக்குழு தெரிவித்துள்ளது.

இது குறித்து அரசிற்கு அறிவிககப்பட்டுள்ள போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லையென சங்கத்தின் ஏற்பாட்டாளர் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளுக்கு இலங்கை கடற்பிராந்தியம் சுதந்திரமாக மீன்பிடிப்பதற்குரிய இடமாக மாறியுள்ளமை உள்ளூர் மீன்பிடித்தலுக்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளதாக கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கூறியுள்ளார். இதனால் இலங்கை மீனவர்கள் பல்வேறு சிக்கல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். எனினும் இலங்கை கடற்பரப்பிற்குள் வெளிநாட்டுப் படகுகளுக்கு அனுமதி வழங்கப்படவில்லையென மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த விஜேயசேகர தெரிவித்துள்ளார்.

# புலிகளுக்கும் முஸ்லிம்களுக்கும் இ.நி.சபை வழங்கினால் வடக்கு கிழக்கு சிங்களவர்களுக்கும் இ.நி.சபை வேண்டும்

## வடக்கு கிழக்கு சிங்கள மக்கள் அமைப்பு கோரிக்கை

விடுதலைப்புலிகளுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் அரசு இடைக்கால சபையை வழங்குமாயின் வடக்கு கிழக்கில் வாழும் சிங்களவர்களுக்கும் இடைக்கால நிர்வாகம் வழங்கப்பட வேண்டும் என வடக்கு கிழக்கில் வாழும் சிங்களவர் அமைப்பின் அமைப்பாளரான தெகியோவிட்ட ஜயதிஸ்ஸ தேரோ அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

அவ் வறிக்கையில் மேலும் கூறப்படுவதாவது, வடக்கு கிழக்கு மாகாணங்களில் புலிகள் தமக்கு இடைக்கால நிர்வாகத்தைத் தருமாறு கேட்கின்றனர். ஹக்கீம் தெற்கிலும் கிழக்கிலும் தமக்கு இடைக்கால நிர்வாகம் தருமாறு அரசைக் கேட்கின்றார். விடுதலைப் புலிகளுக்கு வழங்கி முஸ்லிம்களுக்கு வழங்காது விட்டால் இப்போதுள்ளதைப் போன்றல்லாமல் மேலும் சிக்கல்கள் உருவாகும். வடக்கு- கிழக்கில் மட்டுமல்ல அகில இலங்கையும் சிங்களவருக்கே உரியது. பொய்யான வரலாற்றுச் சான்றுகளை கூறத் தேவையில்லை. வடக்கு கிழக்கில் காணப்படும் தொல்பொருள் சான்றுகள் சிங்களவர்களுக்குரியதே. வெளிநாட்டவர் இங்கு சுற்றுலாப் பயணம் செய்வது பள்ளி வாசல்களையும் கோயில்களையும் பார்ப்பதற்கல்ல. வரலாற்று முக்கியம் வாய்ந்த இடங்களையும் சின்னங்களையுமே.

ஆதலால் வரலாற்று உரிமைகளைக் காட்டமுடியாத ஏனைய இனங்களுக்கு வடக்கு கிழக்கு இடைக்கால நிர்வாக அலகு அளிக்கப்படுமாயின் அங்கு வாழும் சிங்களவர்களுக்கும் அது போன்ற நிர்வாக அலகு வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கப்படவில்லையாயின் சிங்களவர்கள் உயிர்த்தியாகம் செய்தாயினும் உரிமைகளைப்பெற அங்கு வாழும் சிங்களவர்களை ஒன்றிணைப்போம். இதற்காக உலகெங்கிலும் உள்ள சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவோம்.இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது.

# வேட்பாளர் பட்டியல் தயாரிக்க ஐவர் கொண்ட குழு

### - சுதந்திரக்கட்சி நியமித்தது

நடைபெறவிருக்கும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை ஆராய 5 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில், எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, சரத் அமுனுகம, நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் அடங்குவர். இவர்கள் சனாதிபதி சந்திரிகாவின் தலைமையில் அண்மையில் நடைபெற்ற மத்தியகுழுக் கூட்டத்தின் போது தெரிவு செய்யப்பட்டனர்.

இதற்கு மேலதிகமாக கட்சிப் புனரமைப்புப் பணிகளுக்காக செயலாளர் மைத்திபால சிறிசேன தலைமையிலும் குழு ஒன்று எதிர்வரும் 2ஆம் திகதி நியமிக்கப்படவுள்ளதாகவும் கட்சியின் 52வது தேசிய மாநாடு தொடர்பாகவும் குழு நியமிக்கப்படவுள்ளதாகவும் எல்லாவற்றுக்குமாக 6 குழுக்கள் நியமிக்கப்பட்டு கட்சியின் தேசிய மாநாட்டை விமரிசையாக கொண்டாடத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் கட்சியின் மாத்தளை மாவட்ட எம்.பி ஜனக பண்டார தென்னக்கோன் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைக்கு பாராளுமன்றிலும் வெளியிலும் தமது எதிர்ப்பைக் காட்டுவதாகவும் தீர்மானித்துள்ளனர்.அரசு தமது கட்சி அமைச்சர்களின் பிழைகளை மூடி மறைக்க தென்னக்கோனின் நடவடிக்கையைக் கோடிட்டுக் காட்டுகிறது என்று கூறிய உறுப்பினர்கள்,

ஜே.வி.பி.யுடனான கூட்டணி தொடர்பாக தீவிர கவனம் எடுத்தால் மாகாணசபைத் தேர்தலில் அமோக வெற்றிபெற முடியும் என சனாதிபதியை வலியுறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சுதந்திரக்கட்சி பிரமுகர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதில் பாரபட்சம்

## - பொலிசார் மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அரசியல் பிரமுகர்களின் பாதுகாப்பு விடயத்தில் பொலிசார் பாரபட்சமாக நடந்துகொள்வதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.இவ்வாறான செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளதால் பிரதமர் இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சிறி.சு.கட்சியின் மத்தியகுழு அவசர வேண்டுகோளை விடுத்துள்ளது.அத்துடன் ஏற்கனவே அரசியல் ரீதியில் மேற்கொள்ளப்பட்ட 21 துன்புறுத்தல்கள் பற்றி சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்திடம் முறையிடப்போவதாகவும் அந்தக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

# டெண்டுல்கரின் காருக்கு இந். அரசு வரிவிலக்கு; முன்னாள் அணித் தலைவர் கபில்தேவ் கண்டனம்

சச்சின் டெண்டுல்கரின் வெளிநாட்டுக் காருக்கு மத்திய அரசு வரிவிலக்கு அளித்தமைக்கு இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பெங்களூரில் செய்தியாளர்களிடம் பேசிய கபில்தேவ், டெண்டுல்கரின் காருக்கு மத்திய அரசு வரிவிலக்கு அளித்ததைக் கடுமையாக விமர்சித்தார்.

நாட்டுக்காக அனைத்து வீரர்களும் வியர்வை சிந்தும்போது ஒருவருக்கு மட்டும் சலுகை அளிப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றார்.

இந்த விடயத்தில் மத்திய அரசு இரட்டை வேடம் போடுவதாகவும், நாளை கங்குலிக்கோ, விஸ்வநாதன் ஆனந்துக்கோ, தன்ராஜ் பிள்ளைக்கோ எவரேனும் விமானம் பரிசாக அளித்தால், அதற்கு வரிவிலக்கு அளிக்க அரசு முன்வருமா... என்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.

# டென்னிஸ் வீரர் லியாண்டர்பயஸ் தேறிவருகிறார்

மூளை ஷெல்களில் ஏற்பட்ட பாதிப்புக் காரணமாக அமெரிக்க மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள டென்னிஸ் வீரர் லியாண்டர் பயஸ் வேகமாக குணமாகி வருவதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்தியாவின் பிரபல டென்னிஸ் வீரரும் இரட்டையர் டென்னிஸில் உலகின் முதல் தர ஆட்டக்காரருமான லியாண்டர் பயஸ், மூளை ஷெல்களில் ஏற்பட்ட பாதிப்புக்காரணமாக அமெரிக்க மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

தீவிர சிகிச்சை காரணமாக லியாண்டர் பயஸ் வேகமாகக் குணமாகிவருவதாக மருத்துவமனைத் தலைவர் கிளாரல் கூறியுள்ளார்.

லியாண்டர் பயஸுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு சாதாரணமான ஒன்று தான். இந்தியர்களுக்கு ஏற்படுவதுதான் என்றும்,

லியாண்டர் பயஸ் உற்சாகமாக நடமாடுவதாகவும் அவருக்குப் பார்வைக் கோளாறு எதுவும் ஏற்படவில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

லியாண்டர் பயஸ் குணமடைய வேண்டுமென்று கல்கத்தாவில் கோயில்கள், மசூதிகள், தேவாலயங்களில் மக்கள் பிரார்த்தனை செய்வதாகவும் கூறப்படுகின்றது.



### இராணுவ நெருக்கடிகள் குறித்து

# தமிழீழ மாணவர் பேரவையிடம் பொற்பதி மக்கள் எடுத்துரைப்பு

வடமராட்சிபொற்பதிகிராமத்துக்குச் சென்ற தமிழீழ மாணவர் பேரவை உறுப்பினரையும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களையும் வரவேற்ற மக்கள் தமது மனக் குமுறல்களை வெளியிட்டுள்ளனர்.

நேற்றையதினம்அங்குசென்ற மேற்படி உறுப்பினர்களுக்குத் தமது மனக் குமுறல்களைத் தெரிவித்த மக்கள் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் தாண்டியும் தமக்கு இராணுவ நெருக்கடிகள் தொடர்வதாகவும், இவ்வாறான படையினரின் அட்டகாசங்களைத் தொடர்ந்தும் நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இதனால் எமக்கு இந்தநிலை தீர விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

எம்மைப் பாதுகாக்க எமது விடுதலைப்புலிகள் உள்ளனர். எம்மீது குளிர்காய்ந்து எம்மைக் கவசமாக்கும் இதுபோன்ற அந்நியப் படை எமக்குத் தேவையில்லை, என்றும் இது போன்ற நடவடிக்கைகளை சிறிலங்கா அரசாங்கம் தொடர்ந்து செய்து வந்தால் நாம் போராட்டங்களை நடத்துவோம் என்றும் கூறினார்.

இதற்குத் தமிழீழ மாணவர் பேரவை உறுப்பினர்களும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் எந்த வகையான போராட்டங்களுக்கும் நாங்கள் உதவுவோம் என்றும் உறுதியளித்துள்ளனர்.

இதேவேளை, வடமராட்சி கிழக்கில் பொற்பகுதி கிராமத்திலுள்ள இராணவ முகாம் மேலும் விஸ்தரிக்கப்பட்டு வருவதாக யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். அண்மையில் இப்பகுதியில் படையினரால் அனுமதிக்கப்பட்ட புதிய படைமுகாம் மேலும் விஸ்தரிக்கப்பட்டு வருவதாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.(33,27)

# சிறிலங்கா ராணுவத்திற்கு அமெ. கண்ணிவெடி அகற்றும் பயிற்சி

### ஒப்பந்தம் நேற்றுக் கைச்சாத்து

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தினருக்கு அமெரிக்கா சர்வதேச தரத்திலான மனிதநேய கண்ணிவெடியகற்றும் பயிற்சியினை வழங்கவுள்ளதாக சிறிலங்காவுக்கான அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

அமெரிக்க அரசாங்கத்திற்கும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சுக்கும் இடையே இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று நேற்று சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சில் கைச்சாத் திடப்பட்டது. இதில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பர்னாண்டோவும் அமெரிக்க தரப்பில் அமெரிக்கதூதரக பாதுகாப்பு அதிகாரி எவ். என்ரிவிஸ்ரில்லும் கைச்சாத்திட்டனர்.

இதற்கமைய நான்கு அமெரிக்கர்கள் உட்பட ஆறு கண்ணி வெடியகற்றும் நிபுணர்கள் சர்வதேசத் தரத்திலான கண்ணி வெடியகற்றும் தொழில்நுட்பத்தினர் சிறிலங்கா இராணுவத்திற்கு பயிற்றுவிக்கவுள்ளனர். 2.2 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் மேற்கொள்ளப்படவிருக்கும் இப்பயிற்சி நாளை ஆரம்பமாகி அடுத்த வருடம் பெப்ரவரிமாதம் வரை தொடரவுள்ளது.

# மக்களை அச்சம் கொள்ளவைக்கும் ராணுவத்தின் பயிற்சி நடவழிக்கை!

அச்சுவேலிப் படைத்தளத்தில் நடைபெறும் இராணுவத்தினரின் பயிற்சி நடவடிக்கைகளால் அப்பகுதி மக்கள் பெரும் பரபரப்படைந்துள்ளனர்.

கடந்த இரண்டு நாட்களாக அச்சுவேலிப் பலாலி வீதிப்பகுதியில் உள்ள சிறிலங்கா இராணுவத்தின் படைத்தளத்தில் வீதியாலே செல்லும் மக்கள் பார்க்கக் கூடியதாகப் படையினர் இராணுவப் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இதனால் மக்கள் மிகவும் பீதியடைந்துள்ளனர்.

வீதியின் அருகேயுள்ள இப்படைத்தளப் பகுதி முட்கம்பி வேலிகளால் மாத்திரம் எல்லைப்படுத்தப்பட்டுள்ளது. காலை வேளைகளில் படையினரின் உடற்பயிற்சிகளையும், கலகமடக்கும் பயிற்சிகளையும் சண்டைப்பயிற்சிகளையும்இந்த முட்கம்பி வேலியூடாக மக்கள் தெளிவாக அவதானிக்கக் கூடியதாகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (33)

# விடுதலைப் புலிகளுக்கு எதையும் வழங்காது பிரச்சினையைத் தீர்ப்பதென்பது கற்பனையே

### அமைச்சர் மகிந்த விஜயசேகர

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதனையும் வழங்காது வடக்கு-கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என எவராவது நினைத்தால் அது வெறும் கற்பனையாகவே இருக்கும் என மீண்டும் நீரியல்வள அமைச்சர் மகிந்த விஜயசேகர தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகண்டு யுத்தத்தை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கிலேயே ஐக்கிய தேசிய முன்னணி அரசு செயற்பட்டு வருகின்றது. இந்நிலையில் விடுதலைப்புலிகளைப் புறக்கணித்து பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என்று குறிப்பிட்ட அமைச்சர் நாட்டைப் பிளவுபடுத்தாத வகையில் தீர்வு காணப்படும் எனவும் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாணும் நோக்கில் விடுதலைப்புலிகளின் ஒத்துழைப்புடன் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றும் ஏற்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டார்.

மீனவர்களுக்கு சலுகை அடிப்படையில் எரிபொருள் வழங்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பர்னாண்டோபுள்ளே பாராளுமன்றத்தில் முன்வைத்த தனி நபர் மீதான விவாதத்தில்நேற்றுக்கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் விஜயசேகர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## கலந்துரையாடல்

2003ஆம் ஆண்டு க.பொ.த. உயர் தரப் பரீட்சை எழுதியவர்களில் முல்லைத்தீவு வலயத்தில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானவர்களுக்கான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடல் இன்று காலை 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள பல்கலைக்கழக புகுமுக மாணவர் ஒன்றிய வளாகத்தில் நடைபெறவுள்ளது. இதில் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளதால் பல்கலைக் கழகத்திற்கு தெரிவான அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஒன்றிய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (பா)

## அபிவிருத்திச்சபைக்கூட்டம்

முல்லைத்தீவு வைத்தியசாலை கட்டம்-1 இல் நாளை மாலை 3.00 மணிக்கு அபிவிருத்திச் சபைக் கூட்டம் நடைபெறவுள்ளதால், வைத்தியசாலை நலன் விரும்பிகளைத் தவறாது கலந்துகொள்ளுமாறு (மாவட்ட வைத்திய அதிகாரி) டாக்டர் ஜீ.சி.தர்மேந்திரா கேட்டுக்கொள்கிறார். (26)

# மட்டு. திருப்பெருந்துறையில் மக்கள் எழுச்சி சங்கமம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் புளியந்தீவு கோட்ட அரசியல் துறைக்கு உட்பட்ட திருப் பெருந்துறைக் கிராமத்தில் மக்கள் எழுச்சி சங்கம நிகழ்வு நடை பெறவுள்ளது.

இன்று முதல் நாளை மறுதினம் வரை இந்த நிகழ்வு இடம்பெற இருப்பதாக கோட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சேனாதிராசா தெரிவித்துள்ளார். தமிழீழ விடுதலைப்புலிகளும் அரசியல் நிர்வாகப்பிரிவினரும் திருப்பெருந்துறை மக்களும் இணையும் எழுச்சி சங்கம நிகழ்வாக இது அமைய இருக்கின்றது.

# அம்பாறை மாவட்டத்தில் உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் நேற்று மாலையில் இருந்து உத்தியோகப் பற்றற்ற ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

நேற்று முன்தினம் காணாமல் போனதாகத் தெரிவிக்கப்பட்ட இரண்டு முஸ்லிம்களும் இதுவரை வீடு திரும்பாத நிலையில் அங்கு ஏற்பட்டுள்ள பதற்றத்தைத் தணிக்கவே ஊரடங்கு அமுல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி ஊரடங்குச் சட்டம் சம்மாந்துறை, கல்முனை, அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுகளில் அமுல்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாக அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களில் நேற்று பூரண அமைதி நிலவியதாகக் கூறப்படுகிறது.

## கண்ணிவெடியினைஅழிக்க நடவடிக்கை

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் எவ்.ஏ.ரி. கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தால் மீட்டெடுக்கப்பட்ட கண்ணிவெடிகளில் ஒரு பகுதியினை அழிக்க இந் நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந் நிறுவனத்தால் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மீட்கப்பட்ட வெடிபொருட்களின் ஒரு பகுதியினை செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி நாயாற்றுப் பகுதியில் செயலிழக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இந்நிறுவனத்தின் அதிகாரி ஒருவர்தெரிவித்துள்ளார். (10)

## கூட்டமைப்பின்...

யங்களில் நடைபெறவுள்ளன. இவ்வாறு புதிதாக முஸ்லிம்களை பொலிசில் இணைத்துக் கொள்வது பல விளைவுகளை ஏற்படுத்தும் என தமிழ்க்கூட்டமைப்பு பா.உ.கள் எடுத்துக் கூறியதற்கு பதிலளித்த சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அப்பகுதியில் சட்ட ஒழுங்கை நிலைநாட்டவே இவர்கள் நியமிக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

## முஸ்லிம்...

கண்காணிப்புக் குழுவின் அதிகாரிகள்இக்கூட்டத்தில் கலந்துகொண்டதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இக் கூட்டத்தில் காணாமற் போன இரண்டுமுஸ்லிம் இளைஞர்களைக் கூட்டாகத் தேடிக் கண்டு பிடிப்பது என முடிவு எடுக் கப்பட்டது.

## திருமலை...

பிரிவாக்குமாறும் திரீர் தெளபீக் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த வருடம் இவ்வாறு இரண்டு பிரதேச செயலகர் பிரிவுகளையும் தமக்குப் புதிதாக அமைத்துத்தருமாறு புதிய அரசாங்க அதிபரிடம் கோரியுள்ளார்

இதேவேளை இது தொடர்பாக இடம்பெற்று வரும் முன்னெடுப்புக்களைக் கைவிட வேண்டும் எனக் கோரித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அந்த மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம் சிறிலங்காப் பிரதமருக்கு அவசர தொலைநகல் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக இடம்பெற்ற போர் அனர்த்தங்கள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துப் போவதாகச் சிறிலங்கா அரசு அடிக்கடி கூறிவருகின்றது.

இந்த நிலையில் முஸ்லிம் மக்களைப் பெருமளவில் கொண்டிருக்கும் கிராமங்களைத் தனியாகப் பிரித்துப் புதிய பதிவுகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருப்பதாகத் திருமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம் தெரிவித்துள்ளார் (25)

## தற்போதைய...

யாக முன்னேறி அதனூடாக ஒரு அபிவிருத்தியை உருவாக்க முடியாத நிலையில் மக்கள் பெரிதும் அவலப்பட்டுவருகின்றனர். எனவே உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் நிறைவேற்றப்படும்வரையும் மக்களின் இயல்பு வாழ்க்கை என்பது கேள்விக்குறியாகவுள்ளது என்று சுட்டிக்காட்டி மகஜர் ஒன்றை இவ்வதிகாரியிடம் கையளித்துள்ளனர். (33)

## வேலணையில்...

பர்களிடமிருந்த தங்கச் சங்கிலி ஒன்றையும் 8000 ரூபா பணத்தையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

சிறிலங்காப் படையினரின் இந்தச் செயற்பாடு குறித்து யாழ்ப்பாணப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதே வேளை, சிறிலங்காப் படையினரின் இந்தச் செயலைக் கண்டித்து இன்று காலை தீவகப் பொது அமைப்புகள் பல ஒன்று சேர்ந்து கண்டன அறிக்கை ஒன்றைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு சமர்ப்பிக்கவுள்ளனர். (33)

## சுழுக்கமான...

பகுதிகளைச் சேர்ந்த கோயிலாக் கண்டி மீனவர்கள் நேற்று முன்தினம் படை அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தினர் நாவற்குழி வித்தியாலயப் பாடசாலைக் கட்டடத்தில் இடம்பெற்ற இப் பேச்சுக்களில் இப்பகுதியில் நிலைகொண்டுள்ள 521 ஆவது படையணி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தற்போது கிழக்கு அரியாலை முதல் கண்கிளாய்வரை முட்கம்பி வேலிகளால் உள்ளடக்கப்பட்டிருக்கும் 8 சதுர கிலோமீற்றர் பரப்பினுள்ளேயே மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளப் படையினர் அனுமதித்தனர். ஆயினும் 1999 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் ஏற்பட்ட இடப்பெயர்வை அடுத்து வாழ்ந்த 160க்கும் அதிகமான குடும்பங்கள் இப்பகுதியினுள் தற்போது மீளக் குடியமர்ந்துள்ள நிலையில் சுமார் 200 க்கும் அதிகமான மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள நிலையிலும் இக்கடற் பிரதேசம் தொழில் நடவடிக்கைகளுக்குப் போதாது இருப்பதாக மீனவர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். எனினும் இந்தக் கோரிக்கைளுக்கான முடிவுகளை அறிவிப்பது தொடர்பாகப் படைத்தரப்பு கால அவகாசம் கேட்டதைப்படுத்தே வெகுஜனப்போராட்டங்களை நடத்துவது தொடர்பாக மீனவர் சங்கம் அறிவித்துள்ளது.

இப்பகுதிகளில் காலை 4 மணி முதல் மாலை 6 வரை மாத்திரமே மீன்பிடிக்கப் படையினர் அனுமதித்துள்ள போதும் ...ளங்களில் விளக்குகளை எரியவிடுமாறு படையினர் கூறியுள்ளது குறித்து இப்பகுதி மீனவர்கள் கடுமையான ஆட்சேபத்தில் ஈடுபட்டுள்ளனர். (27)

## வரதர்...

உப்புவெளியில் இரு முஸ்லிம் இளைஞர்களும் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய இராணுவம் வடக்கு - கிழக்கில் நிலை கொண்டிருந்த வேளையில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இற்கு பெருந்தொகையான ஆயுதங்களை வழங்கியிருந்தது. அத்துடன் சிறிலங்கா இராணுவமும் ஆயுதங்களை இவர்களுக்கு வழங்கியிருந்தது. இவற்றைப் பல்வேறு இடங்களில் மறைத்து வைத்திருந்த இவர்கள் இப்பொழுது அவற்றை முஸ்லிம் ஆயுதக் குழுக்களுக்கு வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.


# சாவு அறிவித்தல்



## கந்தையா சூரியகுமார்

கந்தையா சூரியகுமார் 22.08.2003 இல் அகால மரணமானார். இவர் கந்தையா ஞானமலர் அவர்களின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற அரியரத்தினம் பராசக்தியின் மருமகனும் மனோரஞ்சிதத்தின் அன்புக்கணவரும், குகதாசன், கமலதாசன் (சவுதி அரேபியா), இங்காதாசன், டிலைக்ஷன் காலஞ்சென்ற யாழினியின் அன்புத் தகப்பனாரும் நளினியின் மாமனாரும் காலஞ்சென்ற சந்திரராஜா, மகேஸ்வரி(சுவிஸ்) இரத்தினகுமார், லிங்கேஸ்வரி, ஜெயக்குமார்(ஜேர்மன்) விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 24-08-2003 காலை 10.மணிக்கு இவரது இல்லத்தில் நடைபெற்று கந்தபுரம் பொது மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்-
[illegible]
இல-135/8
அக்கராயன் குளம்,
கிளிநொச்சி.

(சி-8269)


இப்பத்திரிகை கிளிநொச்சி ... 2003ம் ஆண்டு ... மாதம் 23ம் திகதி ... வெளியிடப்பட்டது.